ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

यमंत्वेके मृत्युमतोन्यमाहु: आत्मावास ममृतं ब्रह्मचर्यम् ।
पितृलोके राज्यमनुशास्तिदेव: शिवशिवानामशिवोऽशिवानाम् ॥

ஓ! திருதராஷ்டிர மஹாராஜனே!! (ஆத்ம நிஷ்டையிலிருந்து) தவிர் தலைக்காட்டிலும், வேறாக யமனை மிருத்தியுவென்றும், புத்தியில் வஸிப்பவனென்றும், மரணமற்றவனென்றும், பிரும்ம நிஷ்டனென்றும், பித்ரு லோகத்தில் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பவனென்றும், புண்ணியவான்களுக்கு சுகத்தையளிக்கின்றவனென்றும்; பாபிகளுக்குத் துக்கத்தைக் கொடுப்பவனென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இதற்கு முந்திய சுலோகத்தில் மிருத்துயானவன் புலிபோல் பிராணிகளைப் பக்ஷிக்கிறதில்லை. ஏனெனின் மிருத்தியுவுக்கு ரூபமில்லையாதலால் என்று ஸநத் குமாரர் திருதராஷ்டிாருக்குச் சொன்னவுடன் திருதராஷ்டிாருக்கு இவ்வாறு மிருத்தியுவுக்கு ரூபமில்லை என்று சொல்வது சரியாகத் தோன்றவில்லையே! ஸாவித்திரீதேவி சரித்திரத்தில்,

अथ सत्यवत: कायात्पाशबद्धं वशङ्गतम् ।
अंगुष्ठमात्रं पुरुषं निश्चकर्ष यमोबलात् ।

என்று மிருத்யுவுக்கு ரூபமிருப்பதாகவல்லவா சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மிருத்தியுவுக்கு உருவமில்லையென்பது எவ்வாறு பொருந்தும் என்று சங்கை எழும்பிற்று. அதனை நிவிருத்திக்கவேண்டி பரமகிருபாஸாகரரான ஸனத்குமாரர் உபதேசம் செய்கின்றார். ஓ! திருதராஷ்டிாரே!! ஸாவித்திரீ சரிதத்தால் மிருத்தியுவுக்கு ரூபம் உண்டென்ற உம்முடைய சங்கை உண்மையானதே. ஆனால் அந்த யமன் உண்மை மிருத்தியுவாக மாட்டான். அப்படி உண்மை மிருத்தியுவாக அவனை அங்கீகரித்தால் அவனுக்கு மிருத்தியு ஒருவனில்லாமலிருத்தல் வேண்டும். அவன் ஒருவருக்கும் அஞ்சாமலுமிருக்கவேண்டும். அப்படியில்லை. மிருத்தியுவுக்கும் மிருத்தியுவாக ஸர்வேசுவரன் ஒருவன் இருப்பதாகவல்லவா சாஸ்திர ஸித்தாந்தம், அவ்வீசனிடம் பயத்தினால்தான் யமன் தன் அதிகாரகாரியத்தை நீதிவழுவாமல் நடத்திவருகிறான். ஸர்வேசுவரனுக்கு இவ்வுலகமனைத்தையும் ஆகாரமாகவும், இந்தயமனை ஊருகாயாகவும் சுருதி கூறுகின்றது. ஆகவே இந்த யமனுக்கும் ஜன்ம மரணமுண்டு. எவனுக்கு ஜன்மமரணாதி இல்லையோ அவன்தான் யமனை கொல்லமுடியும். இந்த ஜன்ம மரணம் புருஷர்களுக்கு அக்ஞானத்தால் ஆரோபிதமேயொழிய வாஸ்தவமில்லை. இந்த அக்ஞானத்தால் தானல்லாத தேஹாதிகளில் நான் என்னும்புத்தியைச் செலுத்தி சப்தாதி விஷயங்களால் இதனைப்போஷித்து வருவதால் தான் நாம் நாசமுறுகின்றோம். ஆகவே ஸ்வானர்த்த ஹேதுவாயுள்ள இவ்வக்ஞானந்தான் முக்கிய மிருத்தியுவேயொழிய இந்த யமனல்ல. எவனொருவன் சூக்ஷ்ம புத்தியால் ஆத்மாவினின்றும் அனாத்மாவை நேதி நேதிஎன்று பிரித்து அவ் வனாத்ம தேகாதி விலக்ஷணமாய் ஆந்தரமாய் சுயம்பிரகாச சதாநந்தமாய் விளங்கிக்கொண்டிருக்கும் ஆத்மாவை அறிவானோ? அவனே முக்தன். அவனே அமிருதன். அவன்தான் தன்யன். அவன் மிருத்திஞ்ஜயன் என்று.　　　சுபம்.　　　**V. J. S.**

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஹு ஆவணி-மீ ௰௭௨

கலியாண ஸுந்தர தாண்டவம்.

சிதம்பர க்ஷேத்திரத்தின் கண் விளங்காநின்ற ஸ்ரீமந் நடராஜ மூர்த்தியின் தாண்டவம் ஸகலஜனப் பிரஸித்தமேயன்றி கலியாண ஸுந்திர மூர்த்தியின் தாண்டவமானது இதுவரையில் ஓரிடத்திலும் பிரஸித்தமில்லை. அப்படிப்பட்ட தாண்டவமானது தற்காலம் நம் நாடெங்கும்வெகுபிரஸித்தமாக நடந்துவருகிறது. தாண்டவமாடுங் காலத்தில் நல்ல ஸங்கீதம் பாடுவதுண்டு. அப்படியே இக் கலியாணஸுந்திர மூர்த்தியும் இனிய பாடல்களைப் பாடிக்கொண்டே வெகு அழகாகத் தாண்டவமாடிவருகின்றார். அப் பாடலாவது "தொன்றுதொட்டுத் தமிழைத்தாய்மொழியாகக் கொண்டவரும், தற்காலம் நமதுநாட்டில் அந்நியதேசங்களிலிருந்து குடியேறி நிலைத்துவாழ்ந்துவருபவர்களும் தமிழராகலாமென்றுகூறலாம். இவருள் சைவர், வைஷ்ணவர், ஆர்ஹதர், புத்தர், கிரிஸ்தவர், மகம்மதியர் ஆகிய இவரனைவரும் தமிழரேயாவர். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் முக்கியப் பிரமாணமாகு"மென்பது இவரது முதலாவது பாடல்.

இப் பாடலில் மேன்பார்வையாகக் கவனிக்கும்போது ஸமரஸ பாவனை வெளிப்படுவதுபோல் காணப்பட்டாலும் உள்ப்புகுந்தாராய்ந்து பார்த்தோமானால் ஸமரஸ பாவனைக்குத் தகுதியாகப் பொருள் கூறுவது வெகு சிரமப்படும். ஏனெனின் தமிழ் தேசத்தில்ப் பிறந்து வளர்ந்துவருபவர் தமிழராவரேயன்றி அன்யதேசங்களிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறித் தமிழைக் கற்றுக்கொண்டவர் தமிழராகார். அப்படியானால் மஹாராஷ்டிரர், கர்னாடகர், ஆந்திரர், குஜராத்தியர், பாரஸீகர், ஆங்கிலேயர் முதலிய மற்ற வகுப்பினரும், தமிழில் பாண்டித்யம் பெற்றுவிட்டால் தமிழராவதில் தடைசொல்ல நியாயமுண்டோ. ஒருவரிடமிருந்து கற்றுக்

கொள்ளாமல் எவருக்கு எந்தபாஷையானது குழந்தைப் பருவத்திலிருந்து பழக்க வழக்கங்களில் ஸ்வபாவமாகவே அமைந்துளதோ அந்தபாஷைதான் அவருக்குச் சொந்தமானதால் அச் சொந்த பாஷைமூலமாகத்தான் தமிழர், ஆந்திரர், மகாராஷ்டிரர் இவை முதலிய பல நாமபேதங்கள் கற்பிக்கவேண்டும். தமிழ் நாட்டில் பிறந்த ஒருவர் ஆந்திரமோ, ஆங்கிலமோ, அப்யஸித்து அதில் பாண்டித்தியம் பூர்ணமாக அடைந்துவிட்டால் அவரை ஆந்த்ரராகவோ, ஆங்கிலேயராகவோ, அங்கீகரித்துவிடலாமா? என்பதை பிரியவாசகர்களே! ஆலோசியுங்கள். தம் சொந்த பாஷையைத்தவிர தமிழ்பாஷையையும் அப்யஸிக்கும் எல்லா தேசத்தாருக்கும் இது ஒரு பொதுப்பெயராகுமா? காரணப்பெயராகக் கூறுவதில் ஆக்ஷேபமில்லை. இக் காரணப்பெயரால் சொந்தப் பெயரும் சொந்த தேசமும், சொந்த பாஷையும் மறந்தும் போய்விடுமா?

தவிர சைவர், புத்தர், ஆர்ஹதர், இவர்கள்மாத்திரம் தமிழ்ச் சங்கத்தில் வித்வான்களாக விளங்கிவந்தார்களாயினும் கிரிஸ்தவரும், மகம்மதியரும் சங்கத்தில் வித்வான்களாக விளங்கினர்கள் என்பது நம்பத்தகாத விஷயமென்பது வெளிப்படை. தமிழ்ச் சங்கத்துப் புலவர்களாகிய ஆர்ஹதர், புத்தர் முதலியவர் சகோதர நேயத்துடன் வாழ்ந்துவந்தனர் என்பதும் ஆலோசிக்கத்தக்க விஷயமே. சமணருக்கும் சைவருக்கும் பற்பலச் சமய யுத்தம் நிகழ்ந்ததாக சங்கச் சரித்திரத்தால் நன்கு தெரியவில்லையா? அப்படியே பாண்டித்தியச் சண்டையும் அக்காலத்திலில்லாமல் இல்லை. பாண்டித்ய யுத்தம் பாஷாபி விருத்திகாரணமாக ஒருவாறு வைத்துக்கொள்வது நியாயமானுலும், சமய சச்சரவு செய்வது சமய சமாஸநெறி யூடுருவியிருந்து வருவதற்கு அடையாளமாகுமா? ஆகவே இவர் விரும்பிய ஸமத்வ வாதம் அக் காலத்திலும் நிலைபெற்றிருந்ததாகத் தெரியவில்லை. பாஷாபிமான மதிகமிருப்பதாக இப் பாட்டிலிருந்துவெளிப்படுகின்றதேயொழிய யுக்தமாக வேறொரு அர்த்தமும் காணவில்லை.

(2) ஆர்யர் தமிழர் பிரிவு வாதம்.

தமிர் நாட்டில் ஆர்யர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் குடிப்புகுந்துவிட்டதால் பரஸ்பரம் பழக்கவொழுக்கங்களை எற்றுக்

கொண்டு ஆர்யருக்கும் தமிழருக்கும் பேதமில்லாமல்ப்போய்விட் டதென்று இரண்டாவதுபாடல்.

ஆரியர்கள் எங்கிருந்து குடிப்புகுந்தார்கள் என்பது இங் கொரு கேள்வி. இந்தியாவின் வடக்கேயிருந்து வந்தார்களென் றால் தென்னிந்தியாவில் தற்காலம் வசித்துவரும் பிராம்மணர்மாத் திரம் வடக்கேயிருந்த ஆர்யர்களிடமிருந்து பிரிந்து வந்தவரா? இன்றேல் பிராம்மணரல்லாத வகுப்பினரும் அங்கிருந்து பிரிந்து வந்தவரா? யாராயிருந்தாலும் தென் தேசத்தில் குடியேறியதனு லேயே "தூய தனித் தமிழரா" க அவர்களை இவருடைய முதல் பாட்டின் மூலமாக ஒப்புக்கொள்ளும்படி நேரிடுங்காலத்தில், இவர்களுள் பேதம் இல்லாமலிருப்பது இவருக்கு விரும்பத் தக்கதே.

தவிர வடதேசத்திலிருந்து ஆரியர்கள் தென்னாட்டில் குடிப் புகுந்தார்கள் என்னுமிக் கட்டுக்கதைக்கு, வட மொழியிலோ, தென்மொழியிலோ ஏதாவதொரு ஆதாரக் கிரந்தமெடுத்துக் காட் டக்கூடுமா? உலக சரித்திரத்தையெல்லாம் உண்மையாகவே கருத வேண்டுமென்பது வேத வசனமா? காவேரி, தாம்பிரபரணி முத லிய புண்ய நதிகளின் இரு தீரங்களிலும் ஆர்யர் அனேகர் வசித் துவந்தார்கள் என்று கம்பனும் வால்மீகிபகவானும் தாமியற்றிய ராமாயணத்தில் வரைந்திருப்பது பிரமாணமன்றோ? இதைப்பற்றிய சாஸ்திரங்களெல்லாம் அப்பிரமாணமென்றால் இவரது உலக சரித் ரமும் அப் பிரமாணமென்பதற்கு எத்தனை நிமிஷமாகும்.

அன்றியும் ஆரியர் குடியேறினவரென்றே வைத்துக்கொள் வோம். நல்ல பழக்கவொழுக்கங்களையொருவரிடம் மற்றவர் கற்றுக்கொள்வதால் என்ன கெடுதல்? நல்லதை எங்கிருந்தும் கற்றுக்கொள்ளலாமன்றோ? ஆரியரின் ஆசாரங்கெடுதல், என்று இவர் கூறத் துணிவரா? துணிவரேல் அக்ஞாவர். ஆயிர வரு ஷங்களுக்கு முன் குடிவந்த ஸ்வல்ப்ப ஆரியர்கள் பெரும்பான்மை யாரகிய தமிழருக்கு அடிமைகளாகவல்லவா இருந்திருக்கவேண் டும். ஒரே நிமிஷத்தில் அக்காலத்தில் தமிழர் ஆரியர்களை அடி யோடு குடியேறமுடியாமல் அழித்துவிட்டிருப்பார்களே? தென் மொழி குருகுல கூடஸ்தராகிய குறுமுனியும் தென்னாட்டிற்குக் குடியேறினவர்போலும். ஆதலால் இவையெல்லாம் ஆதாரமற்ற தேயாகும்.

தமிழ்நாட்டில் வஸிப்பவருக்கெல்லாம் வடமொழி தென்மொழி இவ்விரண்டும் தாய்மொழி என்று ஒப்புக்கொள்வதில் ஒரு பாதகமுமில்லை. ஆனால் ஆரியர் என்ற சொல் ஆர்யாவர்த்தவாஸிகளைத்தான் குறிப்பிடுமென்பதை இவர் மறக்கலாகாது.

ஆகவே தமிழர் என்று இவர் வழங்கிக் கொண்டாடிவருகிற வகுப்பினரும் ஆர்யராயிருக்கலாம். நம் நாட்டில் மகம்மதியர்களின் அரசாக்ஷிகாலத்தில் அவர்களின் குத்துக்கும் வெட்டுக்கும் பயந்து நம்மவர் பலர் மகம்மதியராகவும் தேசாந்தரம் குடியேறினவர்களாகவும் ஆகிவிட்டனர். அத்தகைய ஸந்தர்ப்பங்களில் ஒருக்கால் ஆர்யாவர்த்தப் பிராந்தியத்திலிருந்து ஆர்யர் இந்தப் பிராந்தியங்களில் வந்திருக்கலாம். அப்படி வந்தவர்களில் பிராம்மணர் பிராம்மணரல்லாதார் இவ்விரு வகுப்பினருமடங்கியிருக்கலாம். வடக்குதிசையின் நுனியிலுள்ள பிரும்மாவர்த்தம் மத்தியதேசம், ஆர்யாவர்த்த தேசம், குருக்ஷேத்திரம், மத்ஸ்யர், பஞ்சாலம், மதுரை, இத்தேசத்திய ஜனங்களின் ஆசாரம் ஸர்வோத்தமமானதென்றும், மற்ற தேசத்திலுள்ளவர்களும் அவ்வாசாரத்தை சிக்ஷித்துக்கொள்ளவேண்டுமென்றும், அங்கவங்காதி மற்ற தேசவாஸிகள் அந்தப் பிரதேசங்களில் வாஸஞ்செய்ய முயற்சிக்கவேண்டுமென்றும் நமது சாஸ்திரங்களிலிருந்து வெளியாகின்றது. இப்படியிருக்கப் பிராமணர்களைமட்டிலும் நாங்கள் ஆர்யர்களென்று சொல்லிக்கொள்வதில்லை. எல்லாப் பிராம்மணரும் வடக்கேயிருந்து தெற்கே குடியேறினார்களென்றும் சொல்லத் தயாராயில்லை. சிலர் தென்னாட்டிலும் வஸித்துவந்திருக்கிறார்கள். அத்தகையாரின் ஆசாரங்களெல்லாம் ஆர்யாவர்த்தாசாரந்தானாகையால் அவையும் சிரேஷ்டமானவையே. இவருக்குச் சொந்த பாஷை தென்மொழியாதலின் இவரே தமிழருமாகலாம் என்பதை யார்தான் மறுக்க வல்லவர்? ஆரியர் தமிழர்வகுப்புப் பேதம் கற்பனாமாத்திரந்தான். ஆதலின் ஆர்யாவர்த்த தேசாசாரத்தைக் கையாண்டுகொண்டு இந்தியாவிலேயே வஸித்துவரும் பிராம்மணரும், பிராம்மண வகுப்பினரல்லாதவரும் ஆரியராவார் என்று ஸித்தாந்தஞ்செய்வது ஸமரஸமாகும் என்று எனது அபிப்பிராயம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

ஸ்ரீவித்யோல்லாஸினீ ஸபா.

ஜகத்குரு வித்யாஸ்தானம் திருவானைக்காவல்.

ஸ்ரீ காஞ்சீகாமகோடி-பீடாதிபதியவர்களான ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யபாதாள் அவர்களால் ஜம்புகேசுவரம் என்ற க்ஷேத்திரத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானத்தில் அக்கல்லூரி மாணவர்களால் சென்ற பக்ஷம் ப்ரதமை முதல் இவ்வருடத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ வித்யோல்லாஸினீ ஸபையின் ஆதரவில் அக்கலாசாலை ப்ரதானோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகளவர்களின் அக்ராஸனத்தின் கீழ் ஆவணி மாதம் 2-௨ ப்ரதமையன்று ஷை ஸபையின் சார்பாக ஒரு வாக்யார்த்தமும் ஒரு உபன்யாஸமும் நடைபெற்றது. வாக்யார்த்தம் சொன்னவர் அக்கலாசாலை மாணவர் சுப்ரமண்யச்ரௌதி என்பவராவார். அவரால் ஆகாசாதிகரணம் வாக்யார்த்தம் இடையில் உபன்யஸிக்கப்பட்டது. பிறகு மேலக்காவேரி சிவராமசாஸ்திரியென்ற மற்றொரு மாணவரால் தர்மம்என்ற விஷயம் உபன்யாசம் செய்யப்பட்டது. அதன் சுருக்கமாவது:-

தர்மம் என்ற வஸ்துவானது மிகவும் அறியமுடியாத விஷயமாகவிருக்கின்றது.

धर्मस्यतत्वं निहितं गुहायां, सूक्ष्मः परमदुर्ज्ञेयः ।

என்கிற வசனங்களும் இதையே கூறுகின்றன. ஆனால் அதை நாம் தெரிந்துகொள்ளாமல் இருக்கக் கூடாது. ஏனெனில் தர்மம் என்பதை அறியாதவன் அதர்மம் செய்ய ஆரம்பிப்பான். அதனால் அனர்த்தம் நேரிடும். இதை சபரஸ்வாமி என்பவர் நன்கு விளக்குகின்றார். அந்த அதர்மானுஷ்டானத்தினால் அனர்த்தம் ஏற்படுகிறது. தர்மத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு அனுஷ்டித்தால்தான்விசேஷபயன் ஏற்படுகின்றது. அப்பயன் இரண்டுவகைப்படும். முதலாவது லோகஸ்திதி இரண்டாவது மோக்ஷப்ராப்தி. இவ்விரண்டும் ஸகல ஜனங்களாலும் விரும்பப்படுகின்றது.

सभगवान् सृष्टेदंगजत् तमेतंवेदानुवचनेन ।

என்ற வாக்யமும் ச்ருதியும் மேற்படி பயனை விளக்குகின்றன' ஆகையால் தர்மத்தின் ஸ்வரூபத்தைநாம் நன்கு அறியவேண்டும். சிலர் தர்மம் என்ற வஸ்துவை விசாரிக்க அவசியம் யாது' அது

யாவராலும் அறியப்படாததே என்கிறனர். அது முற்றும் பரிஹாஸாஸ்பதமாகும். ஏனெனில் பெரிய சாஸ்த்ரக்காரர்களும் இதைப்பற்றி விசாரித்து அறிந்துகொள்ளாமல் பற்பல அபிப்பிராயம் கொடுக்கின்றனர். இங்ஙனம் அதில் பதவிதமாக சந்தேஹம் ஏற்பட அதை நாம் நன்கு உள்ளபடி உணருவது அவசியமாகும்

அதன் ஸ்வரூபத்தை தர்மசாஸ்திரப்ரவர்த்தகரான ஜைமினீ மஹரிஷி என்பவர் "चोदनालक्षणोऽर्थः धर्मः" என்று கூறுகின்றார். ஆபஸ்தம்பர் கூறுவதாவது,

यमार्याः क्रियमाणं प्रशंसन्ति सधर्मः ।

நமது ஆசார்யாள் கூறுவதாவது,

योहियं प्रतिविधीयते सतस्यधर्मः नतुयोयेनस्वनुष्ठातुं शक्यते सतस्यधर्मः।

என்று இங்ஙனம் கூறுவதிலிருந்து நமக்கு புலப்பட்டது யாதெனில் சுருக்கமாய் சொல்லுமிடத்து வேதம் அதைப் பின்பற்றிய ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகள் சிஷ்டாசாரம் ஆத்மதுஷ்டி இவைகளால் எது தர்மம் என்று போதிக்கப்படுவதோ அதுவே தர்மம் எனப்படும். இவ்விதம் கூறுவதில் மற்றொன்றும் தெரிய வருகிறது. அதாவது இந்த தர்மத்தைக் காண்பிவிக்கும் ப்ரமாணங்களும் இவைகளே என்பதாம். இத்தகைய பதார்த்தத்தை க்ரியை என்றும் அல்லது அதனுல் உண்டான சக்திவிசேஷம் அதாவது அபூர்வம் என்றும் கருதுகின்றனர். கடவுள் நம்மை படைத்து நம்மை பாதுகார்த்துக் கொள்ளுவதற்காக நம்மிடத்திலேயே இந்த தர்மத்தை வைத்துள்ளார். இந்த தர்மத்தின் பலனுகவே ப்ரம்மலோகாதிஸ்தான ப்ராப்தி ஏற்படுகின்றது. சூர்ய சந்திராதிகள் முதலிய தேவர்களும் தர்மத்தின் தாரதம்மியத்தினனுகுணமாக அந்தந்த பதவியில் இருந்து வருகின்றனர். நாம் இந்த ஜன்மாவிலும் அடுத்த ஜன்மாவிலும் சுகமாக காலம் கழிக்க சேர்த்து வைத்துக்கொள்ளும் பொருள் இதுவேயாகும். நம்மால் சம்பாதிக்கும் பணம் இந்த ஜன்மாவிலேயே சுகத்தைக் கொடுக்கின்றதா இல்லையா என்று நாம் சந்தேஹப்படவேண்டியிருக்கின்றது. இந்த தர்மம் என்றபொருளோ ஜன்மாந்தரத்திலும்பெரிய பொருளாகவிருந்து சுகத்தைக் கொடுக்கின்றது. இந்த தர்மம் என்ற பொருளை நாம் ஒப்புக்கொள்ளாவிடில் கடவுளுக்கு வைஷ

ம்யம் முதலிய தோஷங்கள் ஏற்படுகின்றன. ஏற்பட்டால் என்ன வென்று கேழ்க்கக் கூடாது. समोहं सर्वभूतेषु என்ற பகவத்வச னம் அப்ரமாணமாய்விடும். சுகம் என்பது யாவராலும் விரும் பக் கூடியதே. அது தர்மத்தினுல்தான் ஏற்படுகின்றது. தர்மம் செய்கின்றவர்கள் கஷ்டப்படுகின்றனரே என்று கேட்டால் அது அதர்மத்தின் பயனுகும். தர்மத்தின் பயன் சுகம் என்று தனி யாகவிருக்கின்றது. "ब्रह्माविश्वसृजाधर्मः" என்ற சுலோகமும் தர்மத்தின் பலன் உத்தமஸ்தானப்ராப்தியென்று தெரிவிக்கின்றது.

இந்த தர்மத்தையே யாதொரு பயனையும் கருதாது அனுஷ் டிப்பானேயானுல் இதுவே சித்தசுத்தியைக்கொடுத்து ஞானத்தை உண்டுபண்ணி மோக்ஷத்தையும் கொடுத்துவிடும்.

"स्वकर्मणा तमभ्यर्च्य" "स्वेस्वेकर्मण्यभिरतः।"

என்ற கீதாவசனம் ப்ரமாணம் இத்தகைய ஐஹிகாமுஷ்மிக பலனை உண்டுபண்ணக் கூடிய தர்மத்தை நாம் ஏன் சரிவர அனுஷ்டிக்கக் கூடாது. நமது முன்னேர்கள் இதை சரிவர அனுஷ்டித்துஅநேக லாபங்களை அடையவில்லையா? இந்த தர்மம் என்ற ஒரு மஹி மை வாய்ந்த வஸ்துவினுலேயே நமது தேசத்திற்கு மிகுந்த கௌ ரவம் இருந்து வந்தது. புண்ய பூமியென்று இதற்குத் தான் பெயர். பவவிதமான புண்யகர்மானுஷ்டானம் செய்ய இந்த தேசமே ஏற்பட்டுள்ளது. அவரவர்கட்கு விஹிதமான கர்மாவை செய்துவந்தால் ஸர்வேசுவரன் ஸரியான கூலிகொடுத்து அருள் புரிவார். இல்லையேல் அவர் ஆக்ஞாரூபமான வேதத்தை அவம தித்த கோபத்தால் நம்மிடம் தயை செலுத்தமாட்டார். கடவுளு டைய கோபத்தினுலேயே பலவிதமான ஜ்வராதிகளும் வியாதிக ளும் நம்மைப் பீடிக்கின்றன. அர்ஜுனனுக்கு மிகவும் நண்பராய் இருந்தும் கிருஷ்ணபகவான் அவனுக்கு அவன் கர்மாவைச் செய் யச் செய்து அதன்மூலமாகத்தான் பயன் கொடுப்பேனென்கிருர்.

तस्माद्युद्धाययुज्यस्व, धर्म्याद्धियुद्धाच्छ्रेयोऽन्यत् क्षत्रियस्यनविद्यते।
सहजं कर्मकौन्तेय

என்ற வார்த்தைகளால் அவனை அவன் காரியத்தில் ஏவுகிருர். सहयज्ञाःप्रजास्सृष्ट्वा என்ற வாக்யத்தினுலும் अग्नौ प्रास्ताहुतिः என்ற மனுவாக்யத்தினுலும் தர்மத்தின் பயன் தான் மழை முத

லியது என்பது ஏற்படுகின்றது. அந்த தர்மத்தைச் செய்யாவிடில் தோஷமும் சொல்லுகிறார். धर्मो रक्षति रक्षितम् எவனுக்கும் எது விஹிதமோ அதை அவன் செய்தால் அதனால் அவன் ஒரு கெடுதலையும் அடையமாட்டான். அதனால் கெடுதல் வருவதாகவிருந்தாலும் அது மேலானதே. தற்சமயம் தேசமுன்னேற்றம் என்ற தொழிலில் இறங்கிய சிலருக்கு அதில் பற்பல கஷ்டங்கள் நேரிட்டாலும் அதைமேலாகவே இவரும் கருதுகின்றனர் என்று வெளிப்படையே. அப்படியிருக்க உள்ள ஸகலலோகத்திற்கும் தனக்கும் பரமக்ஷேமத்தைக் கொடுக்கும் தர்மானுஷ்டானத்தினால் ஒருவருக்குச் கெடுதி நேரிட்டால் அது மேலானதே. स्वधर्मे निधनं श्रेयः நமக்கு எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் எத்தகைய ஏழ்மைத்தனம் வந்தாலும் நாம் நமது கடமையை விடாமல் செய்து வந்தோமேயானால் தர்மதேவதையின் அனுக்ரஹத்தினால்நாம் திரும்ப எல்லோர்களும் புகழும்படியாக மேலானவர்களாக ஆகிவிடுவோம். தர்மம் தலைகாக்கும் என்ற நீதிவாக்யத்தை நீங்கள் கைவிடாதீர்கள். பற்பல கதைகளால் எவ்வளவோ கஷ்டத்தை அடைந்த ஹரிச்சந்திரன் நளன் ராமன் பாண்டவர்கள் முதலிய புண்யபுருஷர்களென்ன நீங்கள் கேழ்கவில்லையா! அவர்களைக் காட்டிலும் நமக்கென்ன ஆபத்துவந்துவிட்டது. அச்சமயத்திலும் அவர்கள் தர்மத்தை கைவிட்டனரா? இல்லவேயில்லை. அதுபோல் நாமும் தர்மத்தைக் கைவிடாமல் அனுஷ்டித்து வந்தோமானால் கொஞ்சகாலத்தில் இந்த கஷ்டம் நீங்கி க்ருதயுகத்தை நாம் இப்பொழுதே பார்க்கலாம். கடவுளும் நம்மை மனமுவப்பார். நாம் யாவரும் சுகமாக வாழலாம். நாம் அடையும் கஷ்டமெல்லாம் தர்மத்தை கைவிட்டதாலேதான் என்ற எண்ணம் நமது யாவருக்கும் இருந்திருக்க வேண்டும். ஆகையால் ஸகல மனிதர்களும் அவரவர்கட்குத் தக்கபடி தர்மானுஷ்டானம் செய்து கடவுளைத் திருப்தி செய்து வைப்பார்களாக. இங்ஙனம் உபன்யாஸம் முடிவுபெற்றவுடன் பிரம்மஸ்ரீ கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் "இந்த சபையானது மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து அடிக்கடி இப்படிப்பட்ட உபன்யாஸங்களை செய்து ஜனங்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்றும் தர்மகார்யங்கள் நசித்துவரும் இக்காலையில் இவ்வித உபன்யாஸங்களைசெய்து ஜனங்களுக்கு ஆஸ்திக்யத்தைப் புகட்டவெண்ணி இந்த ஸபை

யை ஏற்படுத்திய வித்யார்த்திகளுக்கும் அக்ராசனர் அவர்களுக்கும் பரமேசுவரன் அருள்புரிவாரென்றும் சில வார்த்தைகள் சொல்லப்பட்ட பிறகு மறுமுறை ஆவணிமீ 19௳ 4-மணிக்கு அருணாசல சர்மாவால் வாக்யார்த்தமும் அத்தாழ நல்லூர் ராமசுவாமி சிரௌதிகளால் உபன்யாஸமும் நடைபெற வேண்டுமென்ற தீர்மானத்துடன் அக்ராசனர் அவர்களுக்கு வந்தனோபசாரம் கூறி சபை கலைந்தது.

ராமசுவாமிசாஸ்திரிகள்.

நாஸ்திகாஸ்திகஸம்வாதம்.

(848-ம்பக்கத்தொடர்ச்சி)

ஆ:—ஒருக்காலுமேற்படாது. தர்க்கத்தால் புருஷார்த்த லாபம் ஏதாவதிருக்குமானால் நாம் தற்போது துன்பப்படவேமாட்டோம். ஆகவே துன்பம் வருவதற்குக் காரணங்களையும் அதனை நிவிருத்திக்கத்தக்க உபாயங்களையும், தர்க்கமாத்திரத்தால் கண்டுபிடிப்பது கஷ்டம். துன்பம் வருவதற்கு எவரும் முயற்சிக்கமாட்டார்கள். ஆயினும் துன்பம் வாராமலிருப்பதில்லை. சுகம் பெருவதற்கு பல மார்க்கங்களால் முயற்சி செய்தும், கிடைப்பதில்லை. இதனால் இதன் காரணத்தை இதுவரையில் எந்த யுக்தி நிபுணனும் கண்டுபிடிக்கவில்லை. இதுதான் தர்ம ரஹஸ்யமென்பது அதில் யுக்திவாதத்திற்கோ அல்லது மற்ற பிரமாணங்களுக்கோ சிறிதும் அவகாசம் கிடையாது. யுக்திவாதத்தால் ஒன்றையும் நிச்சயமாய் தெரிந்துகொள்ள முடியாது. நிச்சயமாய் அறியப்படாத விஷயங்களை நாம் எப்படி அனுஷ்டிப்பது? ஆகவே யுக்திவாதம் பிரயோஜனமற்றதேயாம்.

நா:— இது இருக்கட்டும். சாஸ்திரமென்றால் என்ன?

ஆ:— சாஸனம் பண்ணுபவரின் வசனம்தான்.

நா:— நமக்கு கட்டளையிடுவோன் யார்.

ஆ:— எவன் நம்மைப் படைத்தானோ அவனுக்குத் தான் சிக்ஷிப்பதற்கும் அனுக்ரஹிப்பதற்கும் அதிகாரம்.

நா:— நம்மைப் படைத்தவர் யார்?

ஆ:— "நான் படைக்கிறேன்" என்று எவன் சொல்லுகிறுனே? அவன் தான்.

நான்:— அவ்விதம் யார் எவ்விடத்தில் சொல்லியிருக்கிறுர் ?

ஆ — சாஸ்திரத்தில் ஈசுவரன் நான் ஸ்ருஷ்டிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறுர்.

நா:— அப்பட்ட ஈசுவான் எங்கே இருக்கிறுன்.

ஆ:— எங்குதானில்லே.

நா:— ஓரிடத்திலும இல்லே.

ஆ:— இது எவ்விதம் நிர்ணயிக்கப்பட்டது ?

நா:— ஓரிடத்திலும் காணவில்லேயாதலின்

ஆ:— இது யுக்தமன்று நீர் ஸர்வக்ஞரா ?

நா:— ஆமாம். அப்படியே இருக்கட்டுமே.

ஆ:- அப்படியானுல் ஈசுவரனேயும் நீர் கண்டறிந்திருக்கவேணுமே இன்றேல் ஸர்வக்ஞத்வம் உமக்கும் எப்படி ஸித்திக்கும் ? உமக்குத் தெரியாமலும் பகவான் எங்கே யாவது ஏன் இருக்கக் கூடாது ?

நா:— அங்ஙனமாயின் முயல் கொம்பும் எங்கே யாவது இருக்கலாமே.

ஆ:— முடியாது. அது அஸத்தல்லவா ? அதனே அறிவிக்கும் பிரமாணம் யாதொன்றுமில்லேயே.

நா:— அப்படித்தான் ஈசுவரனும்

ஆ:— இது ஸரியில்லே, பகவான் ஒருவன் இருப்பதில் சாஸதிரப்பாமாணம் இல்லேயா

நா — அதைத்தான் தேடுகிறேன்.

ஆ:— நமது பாதகண்டம் பூராவும் காணப்படுகின்றதே.

நா:— அதென்ன ?

ஆ:— அதுதான் வேதமென்பது.

நா:— இதுதான் வேதமென்பதில் எனக்கு நம்பிக்கையில்லே.

ஆ:— அவ்விதமானுல் நீர் அறியாத சிறு குழந்தையாவீர்.

நா:— அப்படியில்லே, நம் பாதகண்டத்தில் வேதமிருப்பதுபோல் மற்ற கண்டங்களிலும் வேதமில்லேயா

ஆ:— ஆனால் அவை ப்ரமாணம் என்று தங்களுக்கு நம்பிக்கை உண்டா இல்லையா ?

நா:— இல்லை.

ஆ:— ஆனால் அறியாமை உங்களைவிடவே இல்லை.

நா.— உண்டு,

ஆ;- அப்படியானால் கேவலயுக்திவாதம் பறந்துபோயிற்று. தவிர அப்படிப்பட்ட வேதங்களால் சொல்லப்பட்ட தைய்வத்தையாவது நீர் நம்ப வேண்டியது அவச்யமல்லவா? அவற்றைப் பிரமாணமாக எந்த ஹிந்துவாவது ஒப்புக்கொள்ள முன்வருவானா? அவற்றை மட்டும் ப்ரமாணமாக ஒப்புக்கொண்டுவிட்டு நமது உண்மை வேதத்தை அப்ரமாணமென்று அலக்ஷியம் பண்ணி உதைத்தெறிவது எவ்வளவு மதிஹீனம். நவநாகரிகக் கள்மயக்கத்தால் மகம்மதியர் மேனாட்டினர் முதலியவர்களின் சாஸ்திரங்களையும் ஆசாரானுஷ்டானங்களையும் நமது புராதன புனித ஆசாரங்களையும் ஸமமாகவே கருதிவிட்டீர்களே ?

நா:— இவ்வாறு வேற்றுமைப்படுத்துவது மதிஹீனமன்றி ஸமமாக பாவனை புரிவது அல்ல, எல்லாவற்றிற்கும் ஸம உரிமை அந்தஸ்து கொடுக்கவேண்டாமா ?

ஆ:— இந்தஸர்வஸமத்வவாதம் வாசாகைங்கரியமாத்திரமேயன்றி காரியத்தில் ஒன்றும் முடியாது. சுயநலப் புலிகளாகிய நமக்கு ஸர்வத்திலும் ஸமத்வபுத்தி எது? பிரபு வேலைக்காரனைத்தனக்கு சமமாக பாவிப்பது உண்டா ? கக்கூஸ்வண்டிக்காரனைத் தனக்கு சம அந்தஸ்துடன் மோட்டாரில் எந்த ப்ரபுவாவது எற்றி செல்வானா ? புத்திசாலியானவன் முழுமூடனை எப்படிச் சமமாகக் கருதுவான். பகவானுடைய விஷம சிருஷ்டிக்ரமத்தை நீர் எப்படி யுக்தி வாதத்தால் ஸமப்படுத்த முடியும்? ஆகவே குரானும் பைபிளும் நமக்கு ப்ரமாணமில்லை. வேதசாஸ்திரம்தான் ப்ரமாணம். அதையனுஸரித்து தர்க்கமும் பிரமாணம். சுஷ்க தர்க்கம் பிரமாணமில்லையென்று தான் தாங்களும் அங்கீகரிக்க வேண்டும். ஆதலால் சூது வஞ்சனை முதலிய துர்குணங்கள் அற்ற ஸர்வக்ஞான ஸர்வேசுவரனுடைய அக்ஞாவடிவமான வேதத்தை பின்பற்றித்தான் நாம் நடக்கவேண்டும்.

நா:— சாஸ்திரப்படி நடப்பதால் அதிக துன்பம் நேருகின்றதே

ஆ:— இது விபரீதம். தற்காலத்தில் சாஸ்திரப்ரகாரமாக நடப்பவர் சொற்பமாயிருப்பதால் அதன்படி நடப்பது துன்பமாகத் தோன்றுகின்றது. நமது சாஸ்திரமும் ஆசாரமும் நாடெங்கும் பரவும் பக்ஷத்தில் சாஸ்திரப்ரகாரமாக நடப்பது சுகமாகத் தோன்றும். சாஸ்திரப்ரகாரம் நடவாதவர்களுக்குத் தான் அக்காலத்தில் துன்பம் விளையும் ஆகையால் சாஸ்திரீய மார்க்கந் தான் சுகந்தருமென்று ஸித்தம்.

(தொடரும்) V. J. S.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

மதுகைடவர்.

1. பகவானை மதுஸூதநன் என்று அழைக்கிறோம். அதற்கு மதுவைக்கொன்றவர் என்றுபொருள். மது யார் என அறிய வேண்டாமா? இந்த உலகம் தோன்றித்தோன்றித் அழிகிறதல்லவா? அழிந்தபொழுது எல்லாம் ஸூக்ஷ்மமாக பகவானிடத்தில் லயமாகின்றன. அது தங்கப்பொடி மெழுகில் ஒட்டிக்கொள்வது போல் இருப்பதாக வர்ணிக்கப்படுகிறது.

2. அங்ஙனம் ஒருஸமயம் உலகம் லயமானது. பல்லாயிரமாண்டுகள் சென்றபின் பகவான் உலகைப்படைக்க எண்ணினர். பிரும்மா ஸப்தரிஷிகள் முதலியவர்களைப் படைத்தார். மண்ணைப் பிடித்து நீங்கள் எவராலும் ஜயிக்கப்பட மாட்டீர்கள் என்று கூறினர். அந்தாண்டு மண் பிம்பமே மதுகைடவர் என்றராக்ஷஸர்களானர்கள்.

3. கருங்கடலில் படுத்திருக்கும் பகவானது காதுக் குரும்பிகளிலிருந்து இவர்கள் பிறந்தார்கள். இருவரும் இரு மலைபோலிருந்தனர். பிரும்மதேவர் வாயுவைத்தூண்டினர். அது இவர்கள் உடலில் புகுந்தது. இருவரும் ஆகாயத்தை அளாவிவளர்ந்தனர். பிரும்மா அவர்களைக் கையால் தடவினர்.

4. ஒருவன் உடல் மெதுவாக இருந்தது. அவனுக்கு மது என்று பெயர்வைத்தார். இன்னொருவன் சரீரம் கடினமாயிருந்தது. அவனுக்குக் கைடவன் என்று பெயரிட்டார். விஷ்ணு வரங்கொடுத்தாரல்லவா? அதனால் இவர்கள் கர்வங்கொண்டனர், ஸமுத்ரமெல்லாம் சுற்றினர். ஆகாயத்தில் அலைந்தனர்.

5. தேஹக் கொழுப்பினுல் யார் சண்டைக்குவருவர் யார் வருவர்? என்று இிர்ந்தனர். இவர்களைக் கண்டவுடன் பிரும்மா வுக்கு பயமுண்டாயிற்று. கடலில் குதித்தார். ஜலத்தில் முழு கினுர். அங்கும் அஸுரர் வருவரோ என்று பயந்தார், பகவானது நாபியில் ஓர் தாமரை இருக்கிறதல்லவா?

6. அதில் புகுந்துக்கொண்டார். தனக்கு அபயமளித்த தாமரையைப் பூஜித்தார், பலவர்ஷங்கள் அங்கேயே தங்கினின்றூர். அங்கும் வந்துசேர்ந்தான் அஸுரன். சரணமடைந்தவனைக் காப் பது பெரிய தர்மமல்லவா? தர்மத்தை உலகிற்களித்த பகவான் அதை அனுஷ்டித்துக்காட்ட எண்ணினுர்.

7. தூக்கத்தை விட்டார். படுக்கையிலிருந்து எழுந்தார். அஸுரருடன் சண்டைக்குவந்தார். மூவரும் சேர்ந்து பயங்கர மாக யுத்தம்செய்தனர். பல்லாயிரம் வர்ஷங்கள் போர்நடந்தது. எவரும் சளைக்கவில்லை. எவரும் ஜயிக்கவுமில்லை. பகவானது வீர் யத்தைக்கண்டு அஸுரர் ஸந்தோஷமடைந்தனர்.

8. சத்ருவானுலும் வீர்யத்தைக் கொண்டாடுவது வீரருக் கழகு. குணத்தைக்கொண்டாடுவது குணசாலிகளின் ஸ்வபாவம் அச்யுதனை அஸுரர் உனக்குவேண்டிய வரத்தைக் கேள் என் றனர். அவர் நீங்கள் என்கையால் இறக்கவேண்டும். இதே எனக்குவேண்டிய வரம் என்றூர். ஏமாந்தோமே என்றெண்ணினர்.

9. தங்களுக்குள் நன்றாக யோசனை செய்துக்கொண்டனர். கொடுத்த வரத்தையோ இல்லைஎன்பதற்கில்லை. சாகவோ மன மில்லை என்செய்வது. பகவானைப்பார்த்து அப்படியே ஆகட்டும். ஆனுல் ஜலமில்லாத இடத்தில் எங்களைக் கொல்லுங்கள் என்றனர். எங்கும் ஜலமாயிருப்பதால் அவர் என்செய்வர் என்பது அவ ரெண்ணம்.

10. பகவான் மாயாவிக்கு மாயாவி அல்லவா? தனது தொடை களை விசாலமாக்கினுர். அங்கேது ஜலம்? இரு ராக்ஷஸர்களையும் அங்கே வைத்துக் கொன்றூர். அவர்களது உடம்பிலிருந்து மேதஸ் எனும் கொழுப்பு உண்டாகி ஜலத்தில் கலந்தது. அதி லிருந்தே மேதினி எனும் பூமி உண்டானது. மதுவைக்கொன்ற தால் பகவான் மதுஸூதனனுர்.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

ஸ்ரீகோஸ்வாமியின் முயற்சி. 17௳ நாஸிக்கிலிருந்து ஸ்ரீகோஸ்வாமி கோகுலநாத் மஹாராஜ் என்ற மடாதிபதி சென்னை கவர்னருக்கும் ராஜப் பிரதிநிதிக்கும் திருப்பதி தேவஸ்தான சட்டத்திற்குக் கையெழுத்திடக்கூடாதெனத் தந்திகொடுத்திருக்கிறார். யாத்ரிகர்களது மனதைப் புண்படுத்தி மதத்தில் தலையிடுவதை நன்கு ஆக்ஷேபித்திருக்கிறார். மஹந்துவும் வக்கீல் ரங்காசாரியாரும் சென்னைக் கவர்னரை இவ் விஷயமாகப் பார்க்கப்போகின்றனர். முயற்சியை விடாது செய்வது நம் கடமை.

இஹபரஸாதகம். 12௳ புக்கை ஆலயத்திருப்பணி ஸபையார் ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் அந்த க்ஷேத்ரத்தில் வ்யாஸ பூஜை நடத்திய ஞாபகார்த்தமாக ஓர் மடங்கட்ட அஸ்திவாரக் கல் ஸ்ரீமஹாஸ்வாமிகளின் ஸன்னிதானத்தில் நாட்டினர். தற்காலத்து நாகரீகத்திலீடுபட்டோர் அர்த்தமில்லாமல் ஓர் தூணை அல்லது அது போன்ற ஒன்றை ஸ்தாபிப்பது வழக்கம். அப்படியில்லாமல் பல ஸாதுக்கள் தங்கும்படி செய்த இக் கமிட்டி இஹபர ஸுகத்தைப் பெறுமென்பது திண்ணம்.

பல்லாண்டு வாழ்க. 19௳ நாகை ஹிந்து மதாபிமான சங்கத்தின் 41-வது ஆண்டுவிழா நடைபெற்றது. அச்சமயம் பிரும்மஸ்ரீ ஆஸ்திகமணி சென்னை கே. பாலசுப்ரமண்யய்யரவர்கள் தலைமை வஹித்தார். அவர் மாணவர்களுக்கும் மதாபிமானம் உண்டாக வேண்டிய விஷயத்தை மிகவும் வற்புறுத்தி உபன்யஸித்தார். அவ்வூர் வக்கீல் ஒருவர் பக்தியோகத்தைப்பற்றி உபன்யஸித்தார். மற்றும் பல பண்டிதர்கள் பேசுவர். இது மிகப் பழமையான மதாபிமான சங்கம். அடிக்கடி தானிருப்பதாக இச் சபை காட்டத் தவறுவதில்லை. ஓர் வேதகாவ்ய கலாசாலை இயற்றுதல் அல்லது ஆங்கில கலாசாலையில் மதபோதநம் செய்விப்பது இச் சபையின் கடமையாகும்.

சிபியின்சிறந்த சீலவழி. 19௳ பர்மாவில் ஓர் உத்தமி தன் பதியின் உடல் ரக்தமாம்ஸமில்லாமல் சுண்டியிருப்பதைக் கண்டு ஒருவருமறியாமல் தன் மாம்ஸத்தை அறுத்துப் பாகம் செய்து கணவனுக்களித்தாள். தனது தனத்தை அறுத்துத் தானே பதியின் பொருட்டு இங்ஙனம் செய்தவளின் கற்பைக் கொண்டாடா தவருண்டோ? புருஷன் நோய்வாய் பட்டால் வேறொரு புருஷனை மணக்கலாம் என்று சட்டம்செய்யக் கருதும் மேதாவிகள் இதைக் கவனிப்பாரா? பதியைவிட சிறந்தபாக்யமில்லையென எடுத்துக்காட்டினளிவள். கற்பு வாழ்க.

லக்ஷார்ச்சனை. 26உ கல்லிடைக்குறிச்சியில் விக்நேச்வரருக்கு லக்ஷார்ச்சனை ஆரம்பித்து விநாயகசதுர்த்தியன்று பூர்த்தியாகும். ருத்ராபிஷேகம். கணபதிஹோமம். கணபதி உபநிஷத் பாராயணம் முதலியவைகள் நடைபெறும். முதற்கடவுளான விக்நராஜனை அர்சிப்போர் ஸித்தி பெறுவரென்பது நிச்சயம்.

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி 25உ நடந்த க்ருஷ்ணாவதார தினத்தை நாடி பல இடங்களில் விசேஷக்கொண்டாட்டம நடந்தன. பாம்பேயில் கோவிந்தஊர்வலம் என்று பல பக்தர்கள் க்ருஷ்ணவேஷந் தரித்து நகர ப்ரதக்ஷிணம் சென்றனர். தேசிய யுத்தவாஸனையால் சில துன்பம்நேராதிருந்தால் நன்றாகயிருந்திருக்கும். மைலாப்பூரில் பாட்டுக்கச்சேரி விசேஷமாக நடந்தது. பகவத் சரித்திர சிரவண முமிருத்தல் நலம். மாம்பலத்தில் உபன்யாஸங்களும் காலக்ஷேபங்களும் நடந்தன.

மகோபன்யாஸம். 26உ பிரும்மஸ்ரீ மரூர் கணேச சாஸ்திரிகளவர்கள் சென்னை கச்சபேசாலயத்தில் பல அரிய விஷயங்களை உபன்யஸித்துவருகிறார். மதுரையில் முள்ளக்குடி ஸ்ரீசுந்தரேச சாஸ்திரிகள் ஸ்ரீமத்ராமாண உபன்யாஸத்தைப் பூர்த்திசெய்தார். 4500-பேருக்கு அன்னதானம் நடந்தது. குடியாத்தத்தில் ஸத் காலக்ஷேபத்துடன் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

நல்வழிகாட்டுகிறார் 25உ பூனாவில் என். ஸி. கேல்கார் என்ற தேசாபிமானிக்கு ஷஷ்டியப்தபூர்த்தி நடந்தது. தற்கால வழக்கப்படி அவரைப் பலர் துதித்தனர். அவர் தான் தேடிய 30000 பொருளில் கோஸம்ரக்ஷணத்திற்காகவும் வித்யாவிஷயமாகவும் அன்று 10000-ரூபாயை ஒதுக்கிவைத்தார். தான் தேடிய தனத்தில் ஓரளவு தர்மத்திற்காக ஒதுக்கவேண்டுமென்பது தர்ம நூல் காட்டிய வழி. அதைத் தான் அனுஸரித்து ஏனையோருக்கும் வழிகாட்டுகிறார். தர்மவிரோதமில்லாத தானத்தில் தேசாபிமானிகள் ஈடுபடுவரோ?

வித்வத்ஸபை. அடுத்தமீ 11உ தேவக்கோட்டையில் ஓர் வித்வத்ஸபை கூடுகிறது, பிரும்மஸ்ரீ வாஹூர் வேம்புச்ரௌதிகளவாள் ஸாமகான பாடமுறையை நிர்ணயிக்க இதைக்கூட்டுகிறார். ஸாமவேதத்தில் பலவகையான முறை அனுஸரிக்கப்படுவதை எல்லோருமறிவர். வாதத்திற்கு இடமில்லாமல் எல்லோரும் சேர்ந்து சாஸ்திரவழியைப் பின்பற்றுவரா?

வே. ஸோமதேவசர்மா.